அசல்

21.3.1935. ராம. சோமசுந்தரம்.

அசல் – 1.

COUPON. The remitter may write here any communication to the payee. Rs.______ As.______

[illegible]

11–8–0

Remitter.

மகா மகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையரவர்கள்

81வது ஜனன விழாக் கமிட்டி

நிதி வரவு-செலவு கணக்கு

வரவு		செலவு	
நன்கொடை வரவு		தபால் தந்திச் செலவு	7–11–0
20–3–35 வரை ரூ	573–8–0	பொதுக்கூட்டச் செலவு	
சென்ற வாரப் பத்திரிகையில் வெளியிட்ட தொகை	572–8–0	ஹாலில் மின்சார விளக்கு சார்ஜ்	5
ஹரி ஹர ஐயர்	1–0–0	நாற்காலி வாடகை	15.
சில அன்பர்	11-12-0	மாலை முதலியன	5–13–
		ஆக ரூ.	25–13–0
		அச்சுக் கூலி	16–8–0
		கம்பையில் திறந்து வைத்திருக்கிற ஐயரவர்களின் உருவப் படச் செலவு	23-8-0
		சாமிநாதையரவர்களுக்கு இன்ஷ்யூரில் அனுப்பியது ரூ	500–0–0
		இருப்பு ரூ.	11–12–0
	585–4–0		585–4–0

ரூ 11-12-0 ம் தபால் செலவு நீக்கி ஐயரவர்களுக்கு அனுப்பப் பெற்றது.

அ. சாமி ஐயர்
தலைவர்.

வே. சாமிநாத சர்மா
அ. கருப்பன் செட்டியார்
காரியதரிசிகள்.

ராம. சோமசுந்தரம்
பொக்கிஷதார்.

அசல்

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

81-வது ஜனன விழாக் கமிட்டி (198)

தலைவர். திரு. அ. சாமி ஐயர்.

காரியதரிசிகள். திரு. வெ. சாமிநாத சர்மா.

" " அ. கருப்பன் செட்டியார்.

பொக்கிஷதார். திரு. ராம. சோமசுந்தரம்.

110, 48-வது வீதி,

கிழக்கு ரங்கூன் 21. 3. 1935.

ப்ரம ஸ்ரீ

மஹாமஹோபாத்தியாய

உ.வே. சாமிநாதையரவர்கள்.

"தியாகராஜ விலாசம்"

திருவேட்டீசுவரன் பேட்டை. சென்னை.

அன்பு கெழுமிய ஐய,

தங்கள் கடிதங்கள் யாவும் கிடைத்தன. அன்பும் ஆசியும் நிறைந்த அக்கடிதங்களை, எங்கள் வாழ்நாளில் பெற்ற அரிய பொக்கிஷங்களாகக் கருதுவோம். தங்களுடைய தொடர்பை எங்களுக்கு உண்டாக்கித்தந்த தமிழ்த் தெய்வத்தை வழுத்தி மகிழ்தலையல்லாது நாங்கள் வேறென் செய்ய வல்லோம்?

ஜனன விழாக் கமிட்டியின் கூட்டமொன்று 20.3.35. புதன்கிழமை மாலை கூடியது. நிதிக்கணக்குகள் அங்கீகரிக்கப் பெற்றன. கையிருப்புத் தொகையைத் தங்களுக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப் பெற்றது. அதன்படி இன்று மணியார்டர் மூலம் ரூ 11-8-0. (ரூபாய் பதினொன்று அணா எட்டு) அனுப்பியுள்ளோம். அங்கீகரிக்க வேண்டுகிறேம். கமிட்டி கலைக்கப்பெற்றதாதலின், இனி ஏதேனும் நன்கொடைகள் கிடைத்தால் அவைகளை நேரே அனுப்புவிக்கச் செய்கிறேம். இப்பொழுது அனுப்பப் பெற்றுள்ள தொகை மிகச் சிறிதென்பதையும், இதனை அனுப்ப கமிட்டியார் மிகக் கூசினரென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேம். ஆனால் இந்தத் தொகையில், கமிட்டியாருடைய பாஷாபிமானம் பூரணமாகக் கலந்து இருக்கிறதென்று உறுதி கூறுகிறேம்.

அசல்

உ.

கணக்கு விபரங்களின் பிரதி ஒன்று இதனுடன் இணைக்கப் பெற்றிருக்கிறது.

தங்கள் நல்வரவினை வேண்டிநிற்கும்.

அன்புள்ள.

(கமிட்டியார் உத்திரவுப்படி)

ராம. ஜெயசுந்தரன்.

பொக்கிஷதார்.

21-3-35

8

9 18